RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2013

# வண்ணநிலவனின் ‘கம்பா நதி’ காட்டும் சமூக எதார்த்தவியல்

ஷா. முஹம்மது அஸ்ரின் [அ,*]

[அ] தமிழ்த்துறை, ஜமால் முகமது கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620020, தமிழ்நாடு, இந்தியா.

# Social Realism in Vannanilavan’s ‘Kamba Nathi’

**S. Mohamed Azrin** [a,*]

[a] Department of Tamil, Jamal Mohamed College, Tiruchirappalli – 620020, Tamil Nadu, India

Corresponding Author:
smdazrin1998@gmail.com

Received : 11-09-2019
Accepted : 22-01-2020

**ABSTRACT**

The novel of Vannanilavan portrays the lifestyles and habits of the people living in the Tirunelveli district of Tamil Nadu. In the novel Kampa Nathi, the author expresses the superstitions, relationship problems and birth imbalances of the rural people by the characters of the novel. He also describes the practices which are found in Tamil Nadu such as religion based job placement, collection of Dowry and Bribe, the reality of some corps and the thoughts of elders about young generation through several novel characters. Thus, this article seeks to uncover the reality found in the Tamil society by taking the lines and thoughts from Kamba Nathi novel.

**Keywords:** Vannanilavan, Reality, Employment, Dowry

## சுருக்கவுரை

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நதிக்கரை மக்களையும், கடற்கரை மக்களையும், கிராம மக்களையும் கதை மாந்தர்களாகக் கொண்டு, அவர்களின் வாழ்க்கை முறைகளையும், பழக்கவழக்கங்களையும் தனது எழுத்து மூலமாகப் படம்பிடித்துக் காட்டுபவர், எழுத்தாளர் வண்ணநிலவன். **‘கம்பா நதி’** என்னும் நாவலில் நதிக்கரை மக்களிடம் காணப்படும் மூடநம்பிக்கைகள், உறவுமுறை சிக்கல்கள், பிறப்பால் ஏற்றத்தாழ்வு முதலானவற்றை கட்சிதமாகக் காட்டியுள்ளார். மேலும், இன்றைய உலகில் நடைமுறையிலுள்ள பல எதார்த்தங்களையும் சுட்டிக் காட்டியுள்ளார். இக்கட்டுரையானது கம்பா நதி நாவலில் கூறப்பட்டுள்ள எதார்த்தமான கருத்துகளை பல தலைப்புகளின்கீழ் வெளிக்கொணர முனைகிறது.

## வேலை வாய்ப்பு:

பணிக்குத் தேவையான தகுதிகளையும் திறமைகளையும் கொண்டிருந்தாலும் மதத்தின் அடிப்படையிலேயே வேலை கொடுக்கப்படுகிறது. ஒரு தனியார் பள்ளியிலோ அல்லது கல்லூரியிலோ வேண்டிய ஆசிரியர்களை தேர்ந்தெடுக்கும் மனிதர்கள் தங்களது மதத்தை சார்ந்தவருக்கோ அல்லது அப்பள்ளி கல்லூரி சார்ந்த மதத்தவருக்கோ முன்னுரிமை வழங்குகின்றனர். இதனை,

"அவனுடைய அம்மா கிறிஸ்தவப் பெண். இப்படி இல்லாமலிருந்தால் மார்க்கெட் ஸ்கூலில் அவளுக்கு டீச்சர் வேலை கிடைத்திருக்குமா?" **(Vannanilavan, 1985)** என்ற வரிகளால் தமிழகத்தில் சமய சார்ந்து வேலை கொடுக்கப்படும் அவல நிலையை சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், தகுதியும் திறமையும் இல்லாத வேலை தேடும் மனிதர்கள் தங்களது உறவினர்கள், நண்பர்கள், அரசு அதிகாரிகள், அரசியல்வாதிகள் போன்றவர்களின் சிபாரிசில் (பரிந்துரையில்) வேலையை பெறுகின்றனர். இதனால், சிறப்பான கல்வித் தகுதியும் சீரிய திறமையும் கொண்ட மக்களுக்கு வேலையில்லாமல் போகிறது.

"ஒவ்வொருவரும் அந்த ஆபீஸில் வேலை பார்க்கிற ஒருத்தரையாவது தெரிந்து வைத்திருந்தார்கள்." **(Vannanilavan, 1985)** என்பது பணியிடங்களில் காணப்படும் எதார்த்தமான சூழலை சுட்டிக்காட்டுகிறது.

பல நேர்முகத்தேர்வுகளில் கலந்து கொண்டு திறமையின்றி தோல்வி அடைந்த கணேசனுக்கு தனது மாமாவின் சிபாரிசில் சென்னையில் வேலை கிடைக்கிறது.

"இப்போது மெட்ராஸில் பார்க்கிற வேலைக்கு எப்படியோ தன் மாமாவுடைய சிபாரிசில் போய்ச் சேர்ந்தான்." **(Vannanilavan, 1985)** மற்றும் பல நாட்கள் வேலை தேடிக் கொண்டிருக்கும் பாப்பையா ஓர் நேர்முகத்தேர்வில் பங்கேற்கிறான். அவளது அக்கா சிவகாமி, "நான் எங்க எஸ்.ஓ.வை விட்டு அந்த ஆபீசுக்குப் போன் பண்ணச் சொல்றேன்." **(Vannanilavan, 1985)** போன்ற வரிகளால் ஊறவினரின் பரிந்துரையில் வேலை கிடைக்கும் அவலத்தை புலப்படுத்தியுள்ளார்.

உறவினர்களும் நண்பர்களும் கைவிடும் நிலையில் ஆட்சியும் அதிகாரமும் கொண்ட பெரிய மனிதர்களை வேலை தேடும் மக்கள் நாடிச் செல்வர். அரசு வேலையை எதிர்பார்க்கும் மக்கள் கண்டிப்பாக இவர்களிடம் சென்றே தீருவர். இத்தகைய அவலத்தை தீத்தாரப்ப முதலியார் மற்றும் ஆஸ்டின் பிள்ளை போன்ற கதாப்பாத்திரங்கள் வாயிலாக வண்ணநிலவன் வெளிக்கொணர்கிறார்.

"பால்துரை வாத்தியார் பையனுக்கும் ஆழ்வார் தாஸின் மூத்தமகளுக்கும் தீத்தாரப்ப முதலியார் தம்முடைய சிபாரிசின் பேரில் வண்ணார்ப்பேட்டை கோவாப்ரேட்டிவ் பாங்கில் வேலை வாங்கித் தந்திருந்தார்." மற்றும் "நடராஜபிள்ளையின் ஸ்நேகிதரான ஆஸ்டின்பிள்ளை அந்த வருஷம் முன்சிபல் எலெக்ஷனில் நின்று சேர்மனாகவும் ஆகிவிட்டார். அவரிடம் நடையாக நடந்து கண்ணனுக்குப் பில் கலெக்டர் வேலையை வாங்கிக் கொடுத்து விட்டு ............"

பல்வேறு தகுதிகளையும் பல ஆண்டு பணி அனுபவங்களையும் கொண்ட மக்களுக்கு அரசுப்பணி என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. அரசுப்பணியில் சேர்ந்து ஊதியம் பெறுவதற்கு முன் பல்வேறு உள் அரசியல்ககளையும் வெளி அரசியல்களையும் எதிர்கொள்ள நேரிடுகிறது. மேலும், அரசுப்பணி என்பது பெரும்பாலும் தகுதியையும் திறனையும் பாராது சிலரது பரிந்துரையின் படியே கிடைக்கிறது. இதனை

"என்ன படிச்சு என்ன செய்ய, கவருமெண்டுல உத்தியோகத்தத் தூக்கியா குடுத்திருதான்." என்ற கூற்று தமிழகத்தில் நிலவிவரும் அரசின் நிலையை எடுத்துக்காட்டுகிறது. இதனால், அரசு வேலையை நம்பாது படித்த அனைவரும் சுய தொழில் தொடங்க வேண்டும் என்று கல்வி அமைச்சர் கூறுவதும் உற்றுநோக்கத்தக்கது. **"அரசு வேலையை நம்பாதீங்க.. சுயதொழில் செய்ங்க.." (Kalaignarseithigal, 2019, July14).**

## சமூகத்தின் பார்வை:

இன்றைய சமுதாய மக்களின் உள்ளங்கள் மாசடைந்த குப்பையாக காணப்படுகிறது. ஒரே வயதினையுடைய ஆணும் பெண்ணும் ஒன்றாகச் சென்றால், அவர்களை தவறான கண்ணோட்டத்தில் பார்க்கின்றனர். சிவகாமியும் பாப்பையாவும் ஒரு தாய் மக்கள். இருவரும் ஒன்றாகப் பேருந்தில் பயணிப்பதை கண்டவர்களின் பார்வையை வண்ணநிலவன்,

"அவர்கள் இரண்டு பேரையும் பஸ்ஸுக்குள் இருந்த அத்தனை பேரும் சம்பந்தப்படுத்திப் பார்த்தார்கள்." மற்றும் "அவள் சொன்னது போலவே ரோட்டில் போய்க்கொண்டிருந்த எல்லோரும் இவர்களையே பார்த்துக் கொண்டு போனார்கள்." போன்ற தொடர்கள் ஒன்றாக செல்லும் அக்கா - தம்பியை குற்றத்தோடு பார்க்கும் சமுதாயத்தை எடுத்துக்காட்டுகிறது.

மேலும், வயதில் மூத்த பெரியவரோடு இளைஞன் நெருங்கிப் பழகும்போது, சமுதாயம் அவர்களை மாமன் - மருமகனாகக் காண்பதை சரவணப்பிள்ளை - கதிரேசன் ஆகிய இரு கதாப்பாத்திரங்கள் வாயிலாக ஆசிரியர் வண்ணநிலவன் காட்டுகிறார்.

"நாம ரெண்டு பேரும் ஒன்னாப் போறத வாரதப் பார்த்து, மாமனும் மருமகனும் போறாங்கன்னு சொல்லுதானுக."

இவ்வாறு, பிறரது வாழ்க்கையை பேசித்திரியும் மனிதர்களை நோக்கி "அவனவன் வீட்டுக்கதையைத் தவிர அடுத்த வீட்டுக் கதைகள் அனைத்தும் ஒவ்வொருவருக்கும் தெரியும். தமிழகத்தில் இது வாடிக்கைதானே! சிறுசிறுப்பான வேலைத்திட்டம் இல்லாத்தால், இந்தியாவில் ஊர்வம்பு பேசுவதே உன்னதக் கலையாகிவிட்டது." **(Kannappan , 2010)** என கவியரசு கண்ணதாசன் கூறுகிறார்.

## காவல் துறை:

காவல்துறை பொது மக்களின் நண்பர்கள் என்று கூறுகின்றனர். இது சில காவல்துறை அதிகாரிகளுக்கு மட்டுமே பொருந்தும். பல அதிகாரிகள் அரசு கொடுக்கும் ஊதியத்திற்கு

மாறாகப் பிற வழிகளில் பொது மக்களிடம் இருந்தும் ஊதியமாகப் பெற்றுக் கொள்கின்றனர். அத்தகைய காவல்துறை அதிகாரியை குறித்து சங்கரன் பிள்ளை கூறும் கூற்றாக,

“நாடார்தான் மாமூல் குடுப்பாரேடே..................அப்புறம் என்னப்பா தீக்குச்சிக்காரனுக தொந்தரவுங்கியே?”) நாவலாசிரியர் வெளிப்படுத்தியுள்ளர். மேலும், காவல்துறை அதிகாரிகள் தவறு செய்யும் பதவி பலம் கொண்ட மக்களிடம் பணிந்து போவதும், பொது மக்களிடமும் துணிந்து செயல்படுவதும் இன்று எதார்த்தமாகவே உள்ளது. இதனை,

“அடடா! கிரக்கத்தப் பாருங்களேன்... ஒங்கள ஸ்டேசனுக்குக் கூட்டிட்டு போவும்படியாவும் எனக்கு நெலமை வந்துப் போச்சு பாருங்களேன.” மற்றும் “நாம ஸ்டேசனுக்குப் போனதும் நம்ம சேர்மனுக்குப் போன் பண்ணுவம்... எல்லாம் தன்னாப்பல நடக்கும் பாருங்களேன்.” போன்ற தொடர்களால் இன்றைய காவல்துறை அதிகாரிகளிடம் காணப்படும் எதார்த்தமான சூழலை எடுத்துக்காட்டியுள்ளார். அன்றே கண்ணதாசன், “போலீஸ் திருடனுக்குக் கையாளாக இருந்தால் எந்தத் திருடன் பிடிபடுவான்?” என்று கூறியுள்ளார்.

## மனிதர்களின் குணம்:

”வீடுகள் பெரியனவாக இருக்கலாம். அவற்றில் எவ்வளவு வில்லங்கங்கள் இருகுமோ, யார் கண்டது?” **(Vannanilavan, 1985)** என்றார் கண்ணதாசன். பணம் அதிகாமாக் இருக்கும் இடங்களில் குணம் இருக்காது என்பதை உறுதிப்படுத்து வகையில் வசதி வாய்ப்பு பெற்று சீரும் சிறப்பாக வாழும் ஒருவரை சரவணபிள்ளை,

“ஏலே! பெரிய எடத்து வெவகாரங்களே இப்படித்தாண்டா இருக்கும். அதனால் தான் பெரிய எடம்னே பேரு வந்ததுடா.” **(Vannanilavan, 1985)** எனத் தனது நண்பனான சம்பந்ததிடம் கூறுகிறார். மேலும், நடராஜ பிள்ளை தனது நண்பனும் சேர்மெனுமாக இருக்கும் ஆஸ்டின் பிள்ளையை குறித்து,

“பெரிய மனுஷர்களே இப்படித்தான். ஒரு நேரம் வெகு அபிமானத்தோடு பழகுவார்கள், மறு நேரமே எரிந்து விழுவார்கள்.” **(Vannanilavan, 1985)** என தனது மகனான கண்ணனிடம் கூறுகிறார்.

## வரதட்சணை (கைக்கூலி):

வரதட்சணை (கைக்கூலி) என்பது சமுதாயத் தீமைகளுள் ஒன்றாகும். இன்று ஆண்களை பெற்றவர்கள் தனது மகனின் கல்விக்கு செலவிட்ட தொகையை, அவனுக்கு வரப்போகும் பெண்ணின் குடும்பத்திடம் இருந்து பெறுகின்றனர். இங்கு வரதட்சனை தொகை என்பது ஆண்மகனின் கல்வித் தகுதிக்கு ஏற்றவாறு வேறுபடுகிறது. இக்கொடுமைக்கு விழிப்புணர்வும் கல்வியறிவும் இல்லாத கிராம மக்களே அதிகமாக ஆட்படுகின்றனர்.

“அவர் தன் மகனுக்கு பதினைந்து பவுன் நகை, மூன்று கோட்டை விதைப்பாடு நிலம் சகிதமாக வருகிற பெண்ணைப் பார்த்துக் கொண்டிருந்தார்.” **(Vannanilavan, 1985)** எனத் தனது மகனுக்கு வரப்போகும் மனைவியின் அளவுகோளாகக் குணத்தை பாராது, பணத்தை மட்டும் பார்க்கும் ஆண்மகனை பெற்ற தந்தைகளின் எதிர்ப்பார்ப்புகளை பூதலுங்கம் என்ற கதாப்பாத்திரம் வாயிலாகத் தனது நாவலில் வண்ணநிலவன் காட்டியுள்ளார்.

திருமணம் நடைபெறு முன்னரே, மணமகன் வீட்டார் மணமகள் வீட்டாரிடம் வரதட்சணை தொகையை பெற்றுக் கொள்கின்றனர். ஆனால், திருமணம் முடிந்த பின்னர் மீண்டும் ஒரு தொகையை பெண்ணிடம் கேட்டு கொடுமை செய்து, அப்பெண் தற்கொலை செய்யக் காரணமாகின்றனர். இதனை, **“வரதட்சணை கொடுமையால் மரணம் அடைந்த குற்றத்திற்காக 2016ம் ஆண்டு 58 வழக்குகளும், 2017ம் ஆண்டு 48 வழக்குகளும், 2018ம் ஆண்டு 55 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளது.” (Kalaignarseithigal, 2019, July19)** என்ற தற்போதைய கணக்கெடுப்பு தெளிவுபடுத்துகிறது.

## முடிவுரை

இன்றைய தமிழகம் கல்வியில் சிறந்தும் அறிவியலில் வளர்ச்சி பெற்றும் விளங்கினாலும், இங்கு வாழும் மக்களிடம் சில இடங்களில் பிறப்பால் ஏற்றத்தாழ்வும், சமய சார்பாக வேலை கொடுத்தலும் வழக்கத்திலே தான் உள்ளது. கைக்கூலி, கையூட்டு முதலான செயல்களும் சமுதாயத்தில் நடந்து கொண்டுதான் இருக்கிறது. இவை போன்று நடைமுறை வாழ்வில் காணப்படும் எதார்த்தங்களை தனது **‘கம்பா நதி’** நாவல் வாயிலாக வண்ணநிலவன் எடுத்தியம்பியுள்ளார்.

## References


[1] E. Kannappan, (2010). Kavignar Kannathaasan Anubava Mozhikal. Chennai-17:Kannathaasan Publication.

[2] Vannanilavan. (1985). Kambaa Nathi. Chennai-17:Narmatha Publication.

[3] (Kalaignarseithigal, 2019, July 14). https://www.kalaignarseithigal.com/politics/2019/07/14/dont-wait-for-government-jobs-says-minister-jayakumar. Retrieved from Kalaignarseithigal: https://www.kalaignarseithigal.com

[4] (Kalaignarseithigal, 2019, July19). https://www.kalaignarseithigal.com/tamilnadu/2019/07/19/2045-cases-registered-under-the-pocso-act-in-last-one-year. Retreived from Kalaignarseithigal: https://www.kalaignarseithigal.com

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License